காஞ்சிக்கோவில் பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

ந.க.எண்: 362/ 2019 நாள்: 01.04.2022.

## ஈரோடு மாவட்டம் – காஞ்சிக்கோவில் பேரூராட்சி
## திடக்கழிவு மேலாண்மை திட்டம் (SWM) 2021–2022
## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஈரோடு மாவட்டம், காஞ்சிக்கோவில் பேரூராட்சியில் **திடக்கழிவு மேலாண்மை திட்டம் (SWM) 2021–2022** ன் கீழ் கீழ்க்கண்ட வேலைகளைச் செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 19.04.2022–ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்குள் பட்டியலில் கண்டுள்ள தொகை மற்றும் விற்பனை வரியையும் சேர்த்து இப்பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். டெண்டர் டேவணி தொகை இப்பேரூராட்சிக்கு ரொக்கமாக அல்லது வங்கி வரைவோலை மூலமாக 20.04.2022–ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்குள் செலுத்தப்பட வேண்டும். மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன. மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் காஞ்சிக்கோவில் பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் 20.04.2022–ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட இரண்டு உறை முறை, ஒப்பந்தப்புள்ளி முறையில் உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 20.04.2022–ம் தேதி புதன்கிழமை அன்று பிற்பகல் 3.30 மணிக்கு பேரூராட்சியில் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும். மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி படிவத் தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது. ஒப்பந்த ஆவணங்கள் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் ஒவ்வொரு வேலைக்கும் செலுத்த வேண்டிய டேவணித் தொகை ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டால் செலுத்தப்பட வேண்டிய காப்புத் தொகை, சால்வன்சி தொகை மற்றும் இதர விபரங்கள் இவ்வலுவலகத்தில் வேலை நாட்களில் வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். மேலும் **http://www.tntenders.gov.in** மற்றும் **http://townpanchayats.tn.gov.in/tender** என்ற இணையதள முகவரியிலும் ஒப்பந்தப்புள்ளி படிவத்தை பதிவு இறக்கம் செய்து அனுப்பலாம்.

## வேலையின் விபரம்

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. (இலட்சத்தில்) | ஷெட்யூல் படிவம் கிரயத் தொகை | ஒப்பந்தப் புள்ளி டேவணித் தொகை | வேலை செய்து முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| **திடக்கழிவு மேலாண்மை திட்டம் (SWM) 2021–2022** | | | | | |
| 1. | காஞ்சிக்கோவில் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9, சித்தோடு ரோடு, வளமீட்பு பூங்காவில் மரபு கழிவுகளை பயோ மைனிங் மூலம் அகற்றுதல் | 40.71 | 10080/– | 40710/– | 180 நாட்கள் |

### ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1) ஒப்பந்தக்காரர்கள் இப்பேரூராட்சியின் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும். மற்றும் இதர துறைகளில் ஒப்பந்ததாரராக இருந்து அவர்கள்

ஒப்பந்தப்புள்ளி கொடுத்தால் ஒப்பந்ததாரராக உடன் பேரூராட்சியில் உரிய ஆவணங்களைக் கொடுத்து பதிவு செய்ய வேண்டும்.

2) ஒவ்வொரு வேலைக்கும் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகை செலுத்திய ரசீது இணைக்கப் படாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும், எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

3) செலுத்தப்படும் டேவணித் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்பட மாட்டாது. டேவணித் தொகை ரொக்கமாகவோ, கேட்பு வரைவோலையாகவோ செலுத்தலாம்.

4) ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைக்குள் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி **<u>செயல் அலுவலர், காஞ்சிக்கோவில் பேரூராட்சி</u>** என்ற முகவரியிட்டு, கொடுக்க வேண்டும். உறையில் ஒப்பந்தக்காரரின் முழு அஞ்சல் முகவரி இருக்க வேண்டும்.

5) பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளி களையோ எவ்வித காரணம் கூறாமல் ஏற்றுக் கொள்ளப்படவோ அல்லது நிராகரிக்கவோ பேரூராட்சி நிர்வாகத்திற்கு அதிகாரம் உண்டு.

6) ஒப்பந்தக்காரர் தம்மால் அளிக்கப்பட்ட டெண்டரை எவ்வித காரணமும் இல்லாமல் விலக்கிக் கொண்டால் (டெண்டரை ஏற்றுக் கொள்பவர் முடிவு செய்ய வேண்டும்) அவரால் பின்னர் அளிக்கும் டெண்டர்களை எவ்வித காரணமும் இன்றி நிராகரிக்க நேரிடும்.

7) வரப்பெற்று முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு பேரூராட்சி மன்றத்தில் அங்கீகாரம் பெற்ற பின்னரே வேலை உத்திரவு வழங்கப்படும்.

8) ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வேலை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் அதற்குரிய படிவத்தில் ரூ. 20/– மதிப்புள்ள முத்திரைத் தாளில் உடன்படிக்கை எழுதித் தர வேண்டும். உடன்படிக்கை படிவத்தினை ரூ.1/– <u>கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி</u> அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.

9) வேலை உத்திரவில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்துக் கொடுக்க வேண்டும். இல்லையேல் வேலையை ரத்துச் செய்யவும், அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் எல்லா இழப்புக்கும் ஒப்பந்தக் காரர்களே பொறுப்பாவார்கள்.

10) ஒப்பந்தப்புள்ளி கொடுத்த பின்பு பின்வாங்கும் ஒப்பந்தக்காரர்களின் டேவணித் தொகையும் மேலே கண்டுள்ள 9 பத்தியில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றாத ஒப்பந்தக்காரரில் வைப்புத் தொகைகளும் எவ்வித அறிவிப்பும் இன்றி பறிமுதல் செய்யப்படும்.

11) குறிப்பிட்ட தேதிக்குள் வேலையை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்தக்காரர் அவ்வேலைக்கென செலுத்தப்பட்ட டேவணித் தொகையை பறிமுதல் செய்ததாகக் கருதப்பட்டு, பேரூராட்சியின் நிதியில் சேர்க்கப்படுவதுடன் அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு வேலை செய்து முடிப்பதில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும், முந்தைய ஒப்பந்தக்காரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.

12) ஒப்பந்தக்காரர்களே சிமெண்ட் வாங்கிக் கொள்ள வேண்டும். இதன் பொருட்டு, வேலைகள் பாதிக்கப்படக்கூடாது. இதற்கு சம்மதம் அளிக்கும் நபர்கள் மட்டுமே டெண்டர் கொடுக்க வேண்டும். சிமெண்ட் மற்றும் தார்க்கு தரச்சான்று, வேலை முடித்ததற்கான பட்டியலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

13) கட்டுமான வேலைக்கென சேகரம் செய்யப்படும் பொருள்கள் பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால், ஏழு தினங்களுக்குள் அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன், பொறியாளரால் ஏற்றுக் கொள்ளப்படும் வகையில் தரம் வாய்ந்த மாற்றுப் பொருட்களை வேலை நடக்கும் இடத்தில், ஒப்பந்தக்காரர் சேகரித்தல் வேண்டும். தவறினால் நிராகரிக்கப்பட்ட பொருட்கள், பேரூராட்சிப் பொருட்களாக கருதி அப்புறப்படுத்தப்படும்.

14) யாருடைய டெண்டர் ஏற்றுக் கொள்ளப்படவில்லையோ அவரால் செலுத்திய டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பிக் கொடுக்கப்படும்.

15) பணி மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் வேலை முடிவுற்ற பிறகு மூன்றாண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு இப்பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை தனது சொந்த செலவில் சீரமைத்துத் தரப்பட வேண்டும்.

16) வேலையை முடித்த பின்னர் பட்டியல் கீழ்க்காணும் தொகைகள் கழித்துக் கொள்ளப்பட்டு, மீதித் தொகையை மட்டும் பட்டுவாடா செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| அ) கூடுதல் காப்புத் தொகை | – | 3 % |
| ஆ) வருமானவரி | – | 2 % |
| இ) வருமான வரி மேல்வரி | – | 10 % |
| ஈ) கல்வி வரி | – | 3 % |
| உ) GST வரி | – | 2 % |
| ஊ) நிறுத்தி வைக்கப்படும் டேவணி | – | 2 % |
| எ) கட்டுமான தொழிலாளர் சந்தா | – | 1 % |

17) தொடர்புடைய வேலைகளுக்கான பட்டியல் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கைத் தடை ஏதும் இல்லையென முடிவு தெரிந்த பின்னர்தான் அவ்வேலைகளுக்கான ஒப்பந்தக்காரரால் செலுத்தப்பட்ட டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பித் தரப்படும்.

18) பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்கள் அனைத்தையும் அரசு தொழில்நுட்ப கல்லூரியில் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

19) வேலைகள் சம்பந்தமான அவ்வப்போது அரசினரால் வெளியிடப்படும் உத்திரவுகளுக்கு உட்பட்டு ஒப்பந்தக்காரர்கள் வேலைகள் செய்ய வேண்டும்.

20) ஒப்பந்ததாரருக்கு ஒப்படைக்கும் பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் துறை நடவடிக்கையான அபராதம் மற்றும் ஒப்பந்தம் ரத்து செய்வதை ஒப்பந்ததாரரால் தவிர்க்கப்படல் வேண்டும்.

21) ஒப்பந்தக்காரர், இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். டேவணித் தொகை முன் அனுபவச் சான்றிதழ், ஒப்பந்தக்காரர் வகுப்புத் தகுதிச் சான்றிதழ், (தகுதி குறைந்த ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கத் தகுதியற்றவர் ஆவர்).

22) பணியின் போது ஒவ்வொரு நிலையிலும் புகைப்படம் எடுத்து சமர்ப்பிக்க வேண்டும்.

செயல் அலுவலர்,
காஞ்சிக்கோவில் பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

<u>பெறுநர்:</u>
பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்,
காஞ்சிக்கோவில் பேரூராட்சி.
(அஞ்சலிட்ட சான்று மூலம்)
<u>நகல்:—</u>

1) பேரூராட்சிகள் ஆணையர், சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2) மாவட்ட ஆட்சித்தலைவர் ஈரோடு அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3) செயற்பொறியாளர் சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
4) திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட ஆட்சியரகம், ஈரோடு.
5) பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அவர்கள், ஈரோடு அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
6) உதவி செயற் பொறியாளர் அவர்கள், பேரூராட்சிகள் பிரிவு, பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அலுவலகம், ஈரோடு.
7) தொகுதி உதவிப் பொறியாளர் அவர்கள் பெருந்துறை தொகுதி
8) செயல் அலுவலர்கள், சித்தோடு, பெருந்துறை, நசியனூர், கருமாண்டிசெல்லிபாளையம், காஞ்சிக்கோவில், பெத்தாம்பாளையம், பள்ளபாளையம், நல்லாம்பட்டி ஆகிய பேரூராட்சி அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்ய
9) ஆணையாளர் அவர்கள், ஈரோடு, பெருந்துறை அலுவலக விளம்பர பலகையில் விளம்பரம் செய்ய.
10) அலுவலக விளம்பரப் பலகைக்கு.
11) மன்றத் தலைவர் அவர்களின் மேஜைக்கு.